
al-Burhān
JOURNAL OF QUR'ĀN AND SUNNAH STUDIES
VOLUME 6, NUMBER 2, AUGUST 2022
INTERNATIONAL ISLAMIC UNIVERSITY MALAYSIA
eISSN: 2600-8386

# al-Burhān Journal of Qurʾān and Sunnah Studies

AbdulHamid AbuSulayman Kulliyyah of Islamic Revealed Knowledge and Human Sciences
International Islamic University Malaysia
Volume 6, Number 2, 2022



**Honorary Advisors:**

Prof. Dr. Abdullah Saeed, *University of Melbourne, Australia.*
Prof. Dr. Abdul Hakim Ibrahim al-Matroudi, *SOAS, Univ. of London.*
Prof. Dr. Awad al-Khalaf, *University of Sharjah, United Arab Emirates.*
Prof. Dr. M. A. S. Abdel Haleem, *SOAS, Univ. of London.*
Prof. Dr. Mohamed Abullais al-Khayrabadi, *International Islamic University Malaysia*
Prof. Dr. Muhammad Mustaqim Mohd Zarif, *USIM, Malaysia.*
Prof. Dr. Serdar Demirel, *Ibn Haldun University, Istanbul, Turkey.*
Prof. Dr. Israr Ahmad Khan, *Social Sciences University of Ankara, Turkey.*

**Editor-in-Chief** : Dr. Khairil Husaini Bin Jamil, *International Islamic University Malaysia.*
**Language Editor (Eng)** : Dr. Muhammad Adli Musa, *International Islamic University Malaysia.*
**Language Editor (Arb)** : Dr. Amar Fettane, *International Islamic University Malaysia.*
**Members of Editorial Board** :

Assoc. Prof. Dr. Abdulcebbar Kavak, *Karabük Üniversitesi, Turkey.*
Assoc. Prof. Dr. Haziyah Hussin, *Universiti Kebangsaan Malaysia (UKM).*
Dr. Muhammad Fawwaz Muhammad Yusoff, *Universiti Sains Islam Malaysia (USIM).*
Dr. Naim Hank, *Karabük Üniversitesi, Turkey.*
Assoc. Prof. Dr. Noor Mohammad Osmani, *International Islamic University Malaysia (IIUM).*
Dr. Umar Muhammad Noor, *Universiti Sains Malaysia (USM).*
Dr. Zunaidah Mohd. Marzuki, *International Islamic University Malaysia (IIUM).*



© 2022 IIUM Press, International Islamic University Malaysia. All rights reserved.


e-ISSN 2600-8386

**Published Online by:**
IIUM Press, International Islamic University Malaysia, P.O. Box 10, 50728 Kuala Lumpur, Malaysia.
Phone (+603) 6421 5014
Website: http://www.iium.edu.my/office/iiumpress

**Correspondence:**
Editorial Board, al-Burhān Journal,
Research Management Centre,
International Islamic University Malaysia,
P.O Box 10, 50728 Kuala Lumpur, Malaysia
Tel: (603) 6421 5541 / 6126
E-mail: alburhan@iium.edu.my
Website: https://journals.iium.edu.my/al-burhan/index.php/al-burhan/index

**Indexing and Abstracting:** al-Burhān is currently indexed in and abstracted by MyJurnal and Directory of Open Access Journal (DOAJ).


**Disclaimer:** The publisher and editorial board shall not be held responsible for errors or any consequences arising from the use of information contained in this journal; the views and opinions expressed do not necessarily reflect those of the editors and publisher.

*al-Burhān Journal of Qurʾān and Sunnah Studies*, 6: 2 (2022) 103-118.
https://journals.iium.edu.my/al-burhan/index.php/al-burhan/index
Copyright © IIUM Press
e-ISSN 2600-8386

# வாழும் உரிமை: பௌத்த ‘பானாதிபாதா’ மற்றும் ‘கத்தல் அல்-நப்ஸ்’ ஓர் பகுப்பாய்வு

## The Right to Life: An Analysis of the Buddhist *Panathipatha* and the Quranic *Qatl al-Nafs*

**Mohamed Ashath Mohamed Shafeen*, Fathuma Afra**.**

**ஆய்வுச் சுருக்கம்:** மதங்களது புனிதக் கிரந்தங்கள் வாழும் உரிமையினை உத்தரவாதப்படுத்துவதாகவே அமைந்துள்ளது. அது எந்த மதத்தை பின்பற்றக் கூடியவர்களாக இருப்பினும் சரியே. பௌத்தமும் இஸ்லாமும் வாழும் உரிமை சம்பந்தமாக வித்தியாசமான அமைப்பிலே தெளிவான வழிகாட்டல்களை குறிப்பிட்டிருந்தபோதிலும் சமகால உலகில் பௌத்தர்களினதும் முஸ்லிம்களினதும் சந்திப்பானது பல சந்தர்ப்பங்களில் சர்ச்சையாகவும் முரண்பாட்டாகவும் இருந்து வருகிறது. எனவே, இந்த ஆய்வினுடைய நோக்கமானது வாழும் உரிமை சம்பந்தமாக பௌத்த பானாதிபாதா மற்றும் குர்ஆனிக் கதல் அல்-நப்ஸ் என்ற கோட்பாடுகளின் ஊடாக விளக்குவதாக அமைகிறது. இதன் மூலம் பௌத்தர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் மத்தியில் நல்லதொரு மத புரிந்துணர்வினை ஏற்படுத்த முடியும் என்று நம்பப்படுகிறது. இந்நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு ஆய்வானது ஒப்பிட்டு, விவரண ஆய்வு முறையினை கையாண்டுள்ளது. இவ் ஆய்வுக்குரிய முதன்மைத் தரவுகளாக முடியுமான அளவு பௌத்த - இஸ்லாமிய மார்க்க மூலக் கிரந்தங்களில் இருந்து பயன்படுத்தப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. இந்த ஆய்வின் முடிவானது, இஸ்லாமும் பௌத்தமும் இருவேறுபட்ட வித்தியாசங்களைக் கொண்ட மதங்களாக இருப்பினும் வாழும் உரிமை விடயத்தில் இரண்டு மதங்களும் மனிதநேயத்தோடும், மனிதாபிமானத்தோடும் நடப்பதற்கான வழிகாட்டல்களை வழங்கி இருப்பதனை அவதானிக்கலாம். எனவே இதனால் பௌத்தர்கள் இஸ்லாத்தின் மீதுள்ள தப்பபிப்பிராயத்தினையும் முஸ்லிம்கள் பௌத்தர்கள் மீதுள்ள தப்பபிப்பிராயத்தினையும் நீக்க முடியும் நம்பப்படுகிறது.

**திறவுச் சொற்கள்**: இஸ்லாம், பௌத்தம், பாணாதிபாதா, கத்தல் அல்-நப்ஸ், வாழும் உரிமை.

**ABSTRACT:** Religious scriptures guarantee the right of life for every human being, whether they are followers of that religion or not. Although Buddhism and Islam contain detailed explanations on the protection of life in a unique manner, but the encounters of Buddhists and Muslims are most often portrayed as violent confrontations in the modern world. The objective of this paper is to analyse and understand the concept of protection of life through the ideas of *Panathipatha* in Buddhism and *Ḥifẓ al-Nafs* in Islam to promote interreligious understanding. This research applies a library-based qualitative methodology, in which the researchers undertook textual analysis on written materials such as books, journal articles, and internet sources. The research found that both religions share a similar scope on the protection of life which prioritize humanity as its main standard. This study serves to eliminate misunderstandings about religions: Buddhism and Islam, and to facilitate in a process of understanding and for nonviolent commitment among diverse religious groups. To this end, this paper examines to what extent Buddhist *Panathipatha* tenets are similar to the concept of *Ḥifẓ al-Nafs*, paving the way for interreligious dialogue for peace drawing on some fundamental commonalities between Buddhism and Islam.

**Keywords & phrases:** *Comparative religion; Buddhist-Muslim understanding; Protection of life; Panathipatha; Qatl al-Nafs.*

---

* Research scholar, AbdulHamid AbuSulayman Kulliyyah of Islamic Revealed Knowledge and Human Sciences, International Islamic University Malaysia (IIUM). Email: msmaasath@gmail.com

** Research scholar, Postgraduate Institute of Humanities & Social Sciences (PGIHS), University of Peradeniya, Sri Lanka. Email: aframif@gmail.com

## அறிமுகம்

நிலம், நீர், காற்றில் காணப்படும் உயிர் வாழும் பண்புடைய நுண்ணுயிர்கள், தாவரங்கள், பூச்சிகள், விலங்குகள் உட்பட மனிதன் '*உயிரினம்*' என பிரட்டானிகா ஆங்கில அகராதி வரைவிலக்கணப்படுத்துகிறது. [1] வாழும் உயிர்த்தொகுதிகள் அனைத்தும் உயிரினங்கள் ஆகும் என இலகுவான முறையில் விளங்கிக் கொள்ள முடியும். எனினும், இதுவரை உயிர் என்ற சொல்லுக்கு முறையானதும், இறுதியானதுமான ஓர் வரைவிலக்கணம் வழங்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

உயிரினம் தொடர்பாக வழங்கப்பட்டுள்ள அறிஞர்களின் வரைவிளக்கணத்திற்கு ஏற்ப, மனிதனும் ஓர் உயிரினம் என்ற வரையறைக்குள் உள்ளடக்கப்படுகின்றான். இதனடிப்படையில் மனிதனது உரிமைகளுக்கான போராட்டம் 2400ஆண்டுகளுக்கு முன்பு தோன்றியது என விஸ்வநாதன் தனது மனித உரிமைகள் எனும் புத்தகத்தில் குறிப்பிட்டுள்ளார். அதே போன்று இன்றைய 21ஆம் நூற்றாண்டில் மனித உரிமை என்பது தவிர்க்க முடியாதொன்றாக உள்ளது. இது இவ்வாறு இருக்க ஐ.நா. வின் பொதுச் சபையில் 1948ஆம் ஆண்டு டிசம்பர் 10ஆம் திகதி உலக மனித உரிமை பிரகடனம் செய்யப்பட்டது. மனித மாண்பு, சமத்துவம், சுதந்திரம் மற்றும் நீதியை நிலைநாட்ட இப்பிரகடணம் இயற்றப்பட்டது. இன்றைய நூற்றாண்டில் இயற்கை உரிமை, சட்டம், சமூகத் தேவைகள், தனிமனித ஆளுமை, சமூக ஒழுக்க மாண்புகள் போன்றவற்றின் கூட்டுக் கலவையால் தோன்றியதே மனித உரிமைகள் எனப்படும்.[2] இம் மனித உரிமைப் பிரகடனத்தில் **உயிர் வாழ்தல், சுதந்திரம், மற்றும் பாதுகாப்பு ஆகிய உரிமைகள் அனைவருக்கும் உண்டு; அடிமைத்தனம் ஒழிக்கப்பட வேண்டிய செயலாகும்; எந்தவொரு மனிதனும் சித்தரவதைக்கு ஆளாகக்கூடாது; சட்டத்தின் முன் அனைவரும் சமமாகப் பார்க்கப்பட வேண்டும்; எந்தவொரு நபரையும் தக்க காரணமின்றி கைது செய்தல் கூடாது; வன்கொடுமைகளிலிருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்ள வேற்று நாடுகளில் தஞ்சம் கோர அனைவருக்கும் உரிமை உண்டு** என தொடராக 3, 4, 5, 6, 9 மற்றும் 14ஆம் விதிகள் ஈன்று குறிப்பிடுகின்றது.[3]

நாம் மேற்கூறியது போன்று வாழும் உரிமை மனிதர்களுக்கு மாத்திரமன்றி பூமிக்கும் உள்ளது என்ற வகையில் '**பொலிவிய அரசு**' ஒரு சட்டத்தை இயற்றியுள்ளது. அதாவது **"பூமித் தாயின் உரிமைக்கான சட்டம்"** 2010ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் நிறைவேற்றப்பட்டது.[4] பூமியையும் அதிலுள்ள ஒவ்வொரு உயிரையும் பாதுகாக்க வேண்டும்

---

[1] The Britannica Dictionary, s.v. "creature," accessed June 30, 2022 from https://www.Britannica.com/dictionary/creature

[2] V.N. Viswanathan, *Manitha Urimaigal* (Sri Lanka: Eastern University, 2006), 10.

[3] NY United Nations Department of Public Information, 'Universal Declaration of Human Rights - English', United Nations, accessed 30 June 2022, https://www.ohchr.org/en/human-rights/universal-declaration/translations/english.

[4] Aadhi, 'Boomith Thaaikkum Urimai Undu', Hindu Tamil, 2015.

என்பதே இந்தச் சட்டத்தின் அடிப்படை. இவ்வாறு உலகில் உள்ள அனைத்து உயிரினங்களின் வாழ்வாதாரம் தொடர்பாக சட்டங்கள் பல இயற்றப்பட்டு வருகின்ற நிலையில் இவ் உரிமைகள் தொடர்பாக மதங்களும் தெளிவுபடுத்தாமல் இல்லை. இதனடிப்படையில் பௌத்தம் உயிர் வாழும் உரிமையை **உயிர்களைக் கொல்லாமை** எனும் போதனையின் கீழ் தெளிவுபடுத்தியுள்ளது.

பௌத்த வரலாற்றை ஆராய்கின்றபொழுது, பௌத்தத்தை தோற்றுவித்த கௌத்தம புத்தரின் வாழ்க்கைக் காலம் கி.மு. 623-543 [5] என பொதுவாகக் கருதப்படுகின்றது. அரச குடும்பத்தில் வசதி வாய்ப்புகளோடு வளர்ந்திருந்தாலும், நடுங்கிக் கொண்டிருந்த முதியவர், நோயால் பீடிக்கப்பட்ட மனிதன், தகனம் செய்யப்பட்டுக் கொண்டிருந்த பிரேதம் எனும் நிகழ்வுகளோடு காவி உடை அணிந்து சாந்தமான நிலையில் தியானம் செய்து கொண்டிருந்த துறவியையும் கண்டார்.[6] இச்சம்பவங்களின் அடிப்படையில் முதல் மூன்று சம்பவங்களிலும் மனிதனிற்கு துன்பமும் மரணமும் உறுதியானது என்பதை உணர்ந்து கொண்டதோடு மாத்திரமன்றி இறுதியாக நான்காவது சம்பவத்தில் துறவியிடம் அமைதியினைக் கண்ணுற்று உலகைத் துறப்பதே துன்பத்திலிருந்து விடுதலையடைவதற்கான வழி என்பதனை அறிந்து கொண்டார். இதனடிப்படையில் அனைத்தையும் துறந்து தனது 35ஆம் வயதில் பரிநிர்வாணமடைந்தார்.

நிர்வாணமடைந்ததன் ஊடாக '*துக்க, சமுதய, நிரோத, மக்க*'[7] எனும் நான்கு உண்மைகளை கண்டடைந்தார். முதலாவது உன்னத உண்மை:

**துக்க** - "*இதங் கோ பன பிக்கவே துக்கங் அரியசச்சங்*" அதாவது வாழ்க்கையில் துன்பம் தவிர்க்க முடியாதது. '*ஜாதிபி துக்க*' - பிறப்பு துக்கமாகும். '*ஜராபி துக்க*' - முதிர்ச்சியடைதல் துக்கமாகும். '*வ்யாதிபி துக்கோ* - நோய் நொடிகள் ஏற்படுவது துக்கமாகும். '*மரணம்பி துக்கங்*' - மரணம் ஏற்படுவது துக்கமாகம். '*அப்பியேஹி சம்யோகோ துக்கோ*' - பிரியமற்றவைகளோடும் பிரியமற்ற நபர்களோடும் சேர்ந்திருத்தல் துக்கமாகும்.[8]

**சமுதய** - துன்பத்திற்குக் காரணம் 'அவா' ஏங்குதல்'என்று இது குறிப்பிடுகின்றது. செல்வம் திரட்டவும், இன்பங்களை அடையவும், உடைமைகளை பெருக்கிக் கொள்ளவும் மனிதன் ஆசைப்படுகிறான். இவை அவனுக்கு மகிழ்ச்சியைத் தருமென்று நம்புகிறான். ஆனால் அவனுடைய வாழ்க்கை தடம்புரண்டு விடுகின்றது.

**நிரோத** – 'துக்கத்தை நிர்வகிக்க முடியும்' என இது கூறுகிறது.

நான்காவது உன்னத உண்மை **மக்க** -. துன்பத்தை நிர்வகிக்கும் எட்டுவழிப் பாதையை இது போதிக்கிறது

இப்போதனைகள் மாத்திரமன்றி, மனிதன் தர்மத்தினை பின்பற்றி பரிநிர்வாணத்தை அடைவதற்காக புத்தபகவான் போதித்த ஒழுக்கப்போதனைகள் பல

[5] Peter Harvey, *An Introduction to Buddhism* (Cambridge: Cambridge University Press, 2013), 8.

[6] Harvey, 17–21.

[7] Peter Harvey, *An Introduction to Buddhist Ethics* (Cambridge: Cambridge University Press, 2000), 31.

[8] சம்யுக்த நிகாயம் 5: தம்ம சக்க பவத்தன

உள்ளன, அதில் ஒன்று தான் பஞ்ச சீலம் எனப்படும் **'ஐ'**வகை ஒழுக்கங்களாகும். அவை, *Pānātipātā veramaṇī* - ***கொல்லாமை,*** *Adinnādānā veramaṇī* - ***கல்லாமை,*** *Kāmesu michācārā veramaṇī* - ***காமமின்மை,*** *Musāvādā veramaṇī* – ***பொய் சொல்லாமை,*** *Surāmerayamajjapamādatthānā veramanī* - ***கள்ளுண்ணாமை என்பனவாகும்.*** பஞ்ச சீலம் போதித்துள்ள ஐந்து ஒழுக்கங்களில் ஒன்றே பானாதிபாதா எனப்படும் ***'உயிரினங்களை அநியாயமான முறையில் கொலை*** செய்யாமை**'**யாகும். இதனை இன்னொரு கண்ணோட்டத்தில் **"**வாழும் உரிமை**"** என குறிப்பிடலாம்.

இதேபோன்று, இஸ்லாமிய மார்க்கமும் உயிரினங்களை வேண்டுமென்றே அல்லது அநியாயமான முறையில் கொலை செய்தல் மூலம் அவற்றினுடைய வாழும் உரிமை அபகரிப்படுவதனை வன்மையாகக் கண்டிக்கிறது. இம் மார்க்கமானது ஒரு புதிய மார்க்கம் அன்றி, நபி ஆதம் (அலை) தொட்டு பல்வேறு காலப்பகுதிகளில் மனித இனத்திற்கு நேர்வழி காட்டுவதற்காக அருளப்பட்டதாகும். இதனடிப்படையில் இறுதியாக அனுப்பப்பட்ட தூதரே நபி முஹம்மத் (ஸல்) அவர்கள் ஆவார்கள். இஸ்லாம் ஆண்-பெண், சிறுவர்கள், பெரியவர்கள் என்ற பாகுபாடு இன்றி உரிமைகளை வழங்கியுள்ளது. அவ்வாறு வழங்கிய உரிமைகளை இஸ்லாம் எவ்வாறு பாதுகாத்துள்ளது என்பதனை விளங்கிக்கொள்ள இஸ்லாத்தின் 'கத்ல்' (கொலைசெய்தல்) பற்றிய நிலைப்பாட்டினை அறிந்துகொள்வது அவசியமாகும். அடிப்படையில் ஒரு உயிரை அநியாயமாகக் கொலை செய்வதானது முழு மனித சமுதாயத்தையும் கொலை செய்ததாக கணிக்கப்படுகின்றது.[9] இதனையே இஸ்லாம் **கத்ல்** என அரபு மொழியில் குறிப்பிடுகின்றது. மேலும் இஸ்லாம் **'**கத்ல்**'** எனும் கொலைசெய்தலை விலங்குகள் மற்றும் தாவரங்களிடையேயும் கடைபிடிக்குமாறு வலியுறுத்துகிறது.

இதனடிப்படையில் உயிர் வாழும் உரிமையான கொல்லாமை எனும் பௌத்த பாணாதிபாதா மற்றும் இஸ்லாமிய கத்ல் என்பன இங்கு ஒப்பிட்டு ஆய்வு செய்யப்பட்டுள்ளது. இது பல்லின சூழலில் உள்ள மக்களிடையே கொல்லாமை தொடர்பாக மலிந்து கிடக்கும் தவறான எண்ணங்களை அகற்றி புரிந்துணர்வுள்ள சமுதாயம் ஒன்றினை உருவாக்கும் என நம்புகிறோம்.

## 1. ஆய்வு முறையியல்

இவ்வாய்வு முறையியலானது, இரு மதங்களுக்கிடையிலான புரிந்துணர்வை ஏற்படுத்தும் வகையில் கொள்கை ரீதியான மற்றும் நம்பிக்கை ரீதியான வேறுபாடுகள், மற்றும் எதிர்மறை கருத்துக்கள் என்ற பகுதிக்குச் செல்லாது *பானாதிபாதா* மற்றும் *கத்ல்* என்ற இரு போதனைகளதும் ஒற்றுமைகளை குறிப்பிட, ஒப்பிட்டு ஆய்வு முறை பயன்படுத்தப்பட்டுள்ளதோடு அதனை விரிவாக விளக்கி, பகுப்பாய்வினை மேற்கொள்வதற்காக விவரண விபரிப்பு முறை (Descriptive method) மூலம் ஆய்வு செய்ய முயற்சித்துள்ளது. இவ் ஆய்வுக்குரிய முதன்மைத் தரவுகளாக முடியுமான அளவு பௌத்த

[9] al-Qurʾan, Sūrah al-Māʾidah 5: 32.

- இஸ்லாமிய மார்க்க மூலக் கிரந்தங்களில் இருந்து பயன்படுத்தப்பட்டுள்ளது. அத்தோடு ஆய்க்குத் தேவையான இரண்டாம் நிலைத் தரவு மூலங்களாக ஆய்வுகள், சஞ்சிகைகள், எழுதப்பட்ட நூல்கள், கட்டுரைகள் என்பன இவ்வாய்வின் மூலங்களாக எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன. இதற்காக தமிழ், ஆங்கில, சிங்கள, பாளி மற்றும் அரபு மொழிகளிலுள்ள ஆக்கங்கள் மீளாய்வுக்குட்படுத்தி பெறப்பட்டுள்ளன.

## 2. கலந்துரையாடல்

### 2.1 பௌத்த மதத்தின் கண்ணோட்டத்தில் வாழும் உரிமை - உயிர்களைக் கொல்லாமை (பானாதிபாதா)

புத்தபகவான் ‘இவ்வுலகில் வாழும் உயிர்கள் உடலினால் மூன்று வகையான பாவங்களை செய்கின்றனர்’ என மொழிந்தார்.[10] அதில் முதலாவது *‘பானாதிபாதா’* அதாவது உயிர்களைக் கொல்லாமை, இரண்டாவதாக *‘கல்லாமை’*, மூன்றாவதாக *‘காமமின்மை’* என்று குறிப்பிட்டுள்ளார்.

மேலும், புத்த போதனைகளில் உயிர்களைக் கொல்லுவது தொடர்பாக பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது:

*“லுாத்தே’*
*‘லோஹிதபாணி’*
*ஹதபஹதே நிவிட்டோ’*
*அதயாபன்னோ சப்பபான பூதேசு’*
*‘பானாதிபாதா”*[11]

கொடூரமான; இரத்தத்திலான கரத்தினோடு; அடித்துக் குத்தி, கொல்லும் மனப்பான்மையோடு, உயிர்கள் மீது எவ்வித கருணையற்று ஒருவர் உயிர்களைக் கொல்வாராயின் அது உயிர் வதையாகும் (மஜ்ஜிம நிகாயம் - தேவதூது சூத்திரம்). இதுவே பஞ்ச சீலத்தில் முதலாவது கட்டளையாகக் காணப்படுகிறது.

வாழ்வு என்பது அனைத்து உயிர்களுக்குமான உரிமை ஆகும். இவ் விதிமுறை உயிரினங்களின் அளவைப் பொருட்படுத்தாமல் பொருந்தும். மேலும், எல்லா உயிரினங்களுக்கும் உயிர்வாழும் ஆசையுண்டு. ஆகையினால், அவன் எவரையும் கொல்வதற்கோ, அதற்கு தூண்டுவதனையோ மேற்கொள்ள வேண்டாம் என பௌத்தம் கூறுகின்றது. இதனையே தம்மபதம்; **“எல்லோரும் தண்டத்துக்கு நடுங்குகின்றனர். எல்லாருக்கும் உயிர்வாழ்வு உவப்புக்குரியதே! தன்னை உவமையாக்கி ஒருவனும் கொல்லவும் கொல்விக்கவும் கூடாது.”**[12] மேலும், இவ்வுலகில் ஒருவன் ஒரு உயிரை

[10] Kiribathkoda Yananandha Therar, *Edo Neegl Thedum Dheva Thoothan* (Polgahavela: Mahamega Veliyeettalarhal, 2017), 9–12.
[11] Therar, 10.
[12] *Dhammapada* (Taipei: The Corporate Body of the Buddha Educational Foundation, 2013), 129, இது ஜேதவனராமத்தில் சப்பக்கிய தேரர்களுக்காக மொழிந்தது.

துன்புறுத்தினால் மறுபிறப்பில் அவனுக்கு நலவு (நன்மை) ஏற்படாது என்பதனையும் பின்வரும் தம்மபத உரையினூடாக விளங்கிக்கொள்ள முடியும்: **"அனைத்து உயிர்களும் சுகமாக வாழ்வதற்கே விரும்புகின்றன. ஒருவன் தன்னுடைய சுகத்திற்காக ஏனைய உயிர்களை அடித்து துன்புறுத்தி இம்சிப்பாராயின் அவர் பரலோகத்தில் சுகத்தினை அடைய மாட்டார்."**[13] மேலும், அந்தணர்கான பிரதான நிபந்தனை அல்லது தகுதியாக, உயிரினங்களை கொலை செய்யாமை என தம்மபதம் விளக்குகின்றது.[14]

இவை மாத்திரமன்றி, தம்மபத செய்யுள்களான 294 – 295 வசனங்களை **'**கிரிபத்கொடை ஞானானந்த தேரர்**'** எழுதிய **'**தர்மச்சுவை ஊற்றெடுக்கும் தம்மபதம்**'** எனும் நூலில் பக்கம் 136இல் பின்வருமாறு விளக்குகிறார்:

> "சன்சார துக்கத்தினை தோற்றுவிக்கும் இந்த தன்ஹா எனும் தாயையும் அகங்காரம் எனும் தந்தையையும் அழிக்க வேண்டும். மரணத்தின் பின் நிரந்தரமாகலாம் எனும் சாசுவத வாதத்தினையும் மரணத்தின் பின் எதுவுமில்லை எனும் உத்தேச வாதம் எனும் இரு அரசர்களையும் அழிக்க வேண்டும். அக மற்றும் புற நிறுவனங்கள் எனும் நாட்டினையும் அங்கு தலைவராக வீற்றிருக்கும் நந்திராகத்தினையும் அழிக்க வேண்டும். இவ் அனைத்தையும் பிரக்ஞையினால் அழித்து துக்கமின்றி இருக்கும் அரஹத் பிராமணர் மோட்சத்தினை நோக்கியே செல்வார்."
>
> மேலும்
>
> *"சன்சார துக்கத்தினை தோற்றுவிக்கும் இந்த தன்ஹா எனும் தாயையும் அகங்காரம் எனும் தந்தையையும் அழிக்க வேண்டும். சந்தேகம் ஐந்தாவதாக இருக்கும் பஞ்ச நீவரணங்கள் எனும் புலிகளின் நடைபாதையையும் அழிக்க வேண்டும். இவ்வாறானவற்றை அழித்து துக்கங்களற்ற அரஹத் பிராமணர் மோட்சத்தினையே நோக்கிச் செல்வார்"* (ஜேதவராமனத்தில் லகுண்டக பத்திய எனும் தேரரை முன்னிட்டு போதித்ததாகும்).[15]

மேலும், ஒரு செயல் கொலையாக கருதப்படுவதற்கான நிபந்தனைகளாக பின்வருவன வரையறுக்கப்பட்டுள்ளன.

a. ஒரு உயிரினத்தின் இருப்பு (உயிரினத்திற்கு உயிர் இருக்க வேண்டும்)
b. அறிவு – ஒரு உயிரினம் உயிருடன் இருக்கிறது என்பதற்கான அறிவு காணப்படல்.
c. கொல்லும் நோக்கம் அல்லது அதற்கான தீர்மானத்தை எடுத்திருத்தல்
d. கொலை செய்வதற்கு தயாராகுதல்.
e. இதன் விளைவாக ஏற்படும் மரணம்.[16]

---

[13] *Dhammapada*, 131, ஜேதவனராமத்தில் சில சிறுவர்களுக்காக போதிக்கப்பட்டது.
[14] *Dhammapada*, 269 & 405.
[15] *Dhammapada*, v. 294 & 295.
[16] Hammalawa Saddhatissa, *Buddhist Ethics* (London: Wisdom Publication, 1987), 75.

எனினும், ஒருவரை கொலை செய்யும் நோக்கில் செயற்படும் சந்தர்பத்தில், அவர் தற்செயலாக வாகனத்தில் மோதி இறந்தால் அது விபத்தாக கணிக்கப்படுகிறதே தவிர இக்கட்டளையை மீறியதாக கருதப்படாது.

மேலும், ஒழுக்கமில்லாத ஒருவரைக் கொலை செய்வதை விடவும் ஒழுக்கமுள்ள ஒருவரைக் கொலை செய்வது தாய், தந்தை, மதகுரு அரஹந் ஒருவரைக் கொல்வதைப் போல பாரதூரமானதாகும். அதே போன்று தற்காப்பிற்காக மேற்கொள்ளப்படும் கொலையை விட பேராசை காரணமாக திட்டமிட்டு மேற்கொள்ளப்படும் கொலை பாரதூரமானதாகும். விலங்குகளை விட மனிதன் ஒழுக்கங்களை பின்பற்றக் கூடியவன். எனவே, விலங்குகளைக் கொல்வதை விட மனிதனைக் கொலை செய்வது மிகப்பெரும் பாவமானதாகும். அதிலும் பிராமணரை கொலை செய்வது மிகப்பெரிய பாவமானதாகும்.[17] இதனையே, **"எந்தவொரு உயிரினத்தின் வாழ்க்கையையும் அழிப்பவர். தனது அடுத்த பிறவியில் செல்வம், அழகு ஆகிய அனைத்து வசதிகளை பெற்றிருந்தாலும் சிறந்த நிலையில் மரணத்தை சந்திக்கமுடியாது."** என்று பௌத்த மதம் கூறுகிறது.

இலங்கை உட்பட பௌத்த மக்கள் செறிந்து வாழக்கூடிய பகுதிகளில் காணப்படும் பிரதான வாதப்பொருளாகக் காணப்படுவது மாமிச - புலால் உணவு உட்கொள்ளல் தொடர்பானதாகும். இம் மாமிச உணவு தொடர்பாக இலங்கையை சேர்ந்த **'**சங்கைக்குரிய தியகடுவே சோமானந்த தேரர்**'** கூறிய நீண்ட உரையில் இருந்து சில விடயங்களை கீழ்வருமாறு குறிப்பிடுகிறோம். ***'****உயிருள்ளவரை பிக்கு ஒருவர் மாமிசம் உட்கொள்ளக் கூடாது****'*** *என்று தேவதத்த தேரர் கூறியபோது புத்தர் அதனை ஏற்றுக் கொள்ள மறுத்தார்* என்று சோமானந்த தேரர் குறிப்பிட்டுள்ளார். மேலும்

> **"***மாமிசத்தை விரும்பியோர் உண்ணுங்கள், விரும்பாதோர் தவிர்த்துக் கொள்ளுங்கள் என்றே புத்தர் போதித்திருந்தார். உட்கொள்ளும் உணவின் அடிப்படையில் எவரும் தூய்மை அடைவதோ தூய்மை இழப்பதோ இல்லை என்பதே புத்தரின் போதனையாகும். மாமிசம் உண்பதும் உண்ணாதிருப்பதும் ஒவ்வொருவரினதும் தனிப்பட்ட விடயமாகும். மாமிசம் உட்கொள்ளாத ஒருவர் தன்னைப் போல பிறரும் மாமிசம் உட்கொள்ளாமல் இருக்க வேண்டும் என்று தூண்டுவதற்காக பௌத்த சமயத்தைப் பயன்படுத்துவது பொருத்தமற்ற செயல்* என தியகடுவே சோமானந்த தேரர் குறிப்பிடுகிறார்**"**[18]

### 2.2 இஸ்லாத்தின் கண்ணோட்டத்தில் வாழும் உரிமை - கொலைசெய்தல் (கத்ல்)

இஸ்லாம் மனிதனுடனும், இறைவனது ஏனைய படைப்புகளோடும் நல்ல முறையில் நடந்து கொள்ளுமாறு பணிக்கிறது. இறைவனது படைப்புக்கள் அனைத்தின் மீதும் நல்ல முறையில் நடந்து கொள்வதென்பது, வணக்கமாக அமைகிறது. இதனையே, **"பூமியில்**

[17] Sanu Mahatthanadull and Mahatthanadull. Sarita, 'The Five Precepts: Criteria and the Promotion of Individual and Social Peace', *The Journal of the International Association of Buddhist Universities (JIABU)* 11, no. 3 (Special Edition on Vesak Celebrations Conference 2) (2018): 180–193.

[18] Thiyagaduva Somananda Thero, 'Sri Lanka Muslims', Facebook, 2019.

**உள்ளவை மீது அன்பு காட்டுங்கள். வானத்தில் உள்ளவன் உங்கள் மீது அன்பு காட்டுவான்"**[19] என கூறுகிறது.

அதேபோன்று இஸ்லாம் அல்லாஹ்வின் படைப்புகள் பற்றி மிகத் தெளிவான சிந்தனையை முன்வைத்துச் செல்கிறது. மலக்குகள், மனிதர்கள், ஜின்கள் என்பவர்களோடு பூமியிலுள்ள அத்தனையும் அவனது படைப்புகள் என்ற சிந்தனையை மனிதனுக்கு அது வழங்குகிறது. **"**நபியே! நாம் உம்மை அகிலத்தாருக்கு எல்லாம் ஓர் அருளாகவேயன்றி அனுப்பவில்லை.**"**[20] இந்த அல்குர்ஆன் வசனம் ஒரு அடிப்படையான விடயத்தை மனிதனுக்குக் கற்றுக் கொடுக்கிறது. மனிதன் மனிதனை நேசிப்பது போல ஏனைய அத்தனை படைப்புகளையும் நேசிக்க வேண்டும். அப்போழுதுதான் மனிதன் அல்லாஹ்வின் குடும்பத்திற்குப் பயனளித்தவனாக மாறி அவனது நேசத்தைப் பெற முடியும். இதன் காரணமாகவே, நபி (ஸல்) அவர்களும் அருளாக அனுப்பப்பட்டுள்ளார் என்பது தெளிவாகின்றது. இவற்றுக்கு மாற்றமாக உயிர்களை கொலை செய்வதனை வன்மையாக கண்டிக்கிறது. வேண்டுமென்றே கொலை செய்வதனை தடுப்பதற்காக தண்டனைகள் பற்றியும் அல்குர்ஆன், சுன்னாவினூடாக விளக்கியுள்ளது.

இறைவனின் படைப்புக்களை மூன்று விதமாக பிரித்து நோக்க முடியும்.

i. மனிதன்
ii. தாவரங்கள்
iii. விலங்குகள்

இனி இவை தொடர்பாக விரிவாகப் பார்ப்போம். இவ் வாழும் உரிமை என்பது பாகுபாடு இன்றி பொதுவானதாகும்.

### 2.2.1 மனிதன் / மனித உயிர்கள்

இஸ்லாதின் போதனைகள் மனிதன் மனிதனை நேசிப்பதற்கான அழகான வழிகாட்டலைத் தருகின்றது. மனிதர்கள் மத்தியில் இஸ்லாம் *'மனிதம்'* என்ற பண்பைக் காணவே விளைகின்றது. மனிதனின் தோற்றம் பற்றி இஸ்லாம் பின்வருமாறு கருத்தினை முன்வைக்கிறது. **"மக்களே உங்களை நாம் ஒரே ஆணிலிருந்தும் பெண்ணிலிருந்தும் படைத்தோம். நீங்கள் ஒருவரையொருவர் புரிந்து வாழ கோத்திரங்களாகவும், கிழைகளாகவும் பிரித்தோம்"**[21] அதே போன்று மனிதனைப் படைத்த இறைவனே இவ்வாறு கட்டளை பிறப்பிக்கிறான். இனமும் நிறமும் வேறுபட்டிருந்தாலும், குலங்களாளும் கோத்திரங்களால் வேறுபட்டிருந்தாலும் அனைவருமே ஒரு தாயினதும் தந்தையினதும் பிள்ளைகள் என்ற கருத்து முன்வைக்கப்பட்டு மானிட ஒருமைப்பாட்டுக்கு வழியேற்படுத்தப்படுகின்றது.

[19] Muḥammad ibn ʿĪsā Abū ʿĪsā al-Tirmidhī, *al-Jāmiʿ al-Kabīr*, ed. Bashar Awwad Maʿruf (Beirut: Dar al-Gharb al-Islami, 1998), ḥadīth no. 1924.

[20] al-Qur'ān, al-Anbiyā' 21: 107.

[21] al-Qur'ān, al-Ḥujurāt 49: 13.

இவை மாத்திரமன்றி, பூமியில் மனிதன் அல்லாஹ்வின் பிரதிநிதி என்ற கருத்தையே அல்குர்ஆன் வலியுறுத்திக் காட்டுகின்றது. **“அந்த நேரத்தை நினைவு கூறும். உம் இறைவன் மலக்குமார்களை நோக்கி பூமியில் நான் எனது பிரதிநிதியைப் படைக்கப் போகிறேன் என்று கூறினான். ….”**[22] இம்மனிதன் ஏனைய படைப்புகள் போல் அன்றி, பொறுப்புக்களை தன்னுள் கொண்டுள்ளான். இப்பொறுப்பு பற்றி அல்குர்ஆன் பின்வருமாறு குறித்துக்காட்டுகின்றது. **“…அத்தகைய அமானிதத்தை மனிதன் சுமந்து கொண்டான்’**.[23]

பொறுப்புணர்ச்சியுள்ள மனிதன் தனது பொறுப்புக்களை நிச்சயம் நிறைவேற்ற வேண்டும். அவனது செயல்களுக்கு அவனே பொறுப்பு. அவனது செயல்கள் மறுமையில் அவனுக்குரிய பலாபலன்களாக அமைந்துவிடும். **“யார் அணுவளவு நன்மை செய்கிறாரோ அவர் அதன் பலனைக் கண்டு கொள்வார். யார் அணுவளவு தீமை செய்கிறாரோ அவர் அதன் பலனைக் கண்டு கொள்வார்.”**[24] என அல்குர்ஆன் விளக்குகின்றது.

இவ்வாறு மனிதன் என்ற உயிருக்கு இவ்வளவு அந்தஸ்துகள் வழங்கியிருக்க, அத்தகைய ஒரு உயிரை தக்க காரணம் இன்றி கொலை செய்வாராயின் அவர் மனிதர்கள் யாவரையும் கொலை செய்தவனாவான் என அல்குர்ஆன் குறிப்பிடுகிறது. **“நிச்சயமாக எவரொருவர் கொலைக்குப் பதிலாகவோ, அல்லது பூமியில் எற்படும் குழப்பத்தைத் தவிர்ப்பதற்காகவோ அன்றி மற்றொருவரைக் கொலை செய்கிறாரோ அவர் மனிதர்கள் யாவரையும் கொலை செய்தவர் போலாவார்**. மேலும், **எவரொருவர் அதனை (ஓர் ஆத்மாவை) வாழவைக்கிறாரோ, அவர் மக்கள் யாவரையும் வாழவைத்தோரைப் போலாவார்……”**[25] இவ்வாறு இவ்வுயரிய உயிரை வாழ வைத்தவர் மக்கள் யாவரையும் வாழ வைத்தவர் என அல்குர்ஆன் குறிப்பிடுவதன் மூலம் உயிர்களுக்கு எந்தளவு தூரம் கண்ணியமளிக்கிறது, உயிர்களை மதிக்கிறது என்பது புலனாகிறது.

மேலும், **‘**மனிதன்**’** என்ற உயிரை கொலை செய்வதை தடுத்துள்ளதோடு மாத்திரமன்றி அதற்குரிய தண்டனைகள் பற்றியும் தெளிவாகக் குறிப்பிடுகின்றது இஸ்லாம். **“நீங்கள் வறுமைக்குப் பயந்து உங்களுடைய குழந்தைகளைக் கொலை செய்யாதீர்கள். அவர்களுக்கும் உங்களுக்கும் நாமே உணவை (வாழ்க்கை வசதியை) அளிக்கின்றோம். அவர்களைக் கொல்லுதல் நிச்சயமாக பெரும் பாவமாகும்”**[26]

**“எவனேனும் ஒருவன் ஒரு முஃமினை வேண்டுமென்றே கொலை செய்வானாயின் அவனுக்குரிய தண்டனை நரகமேயாகும்.”** [27] இது உயிரிற்கான பெறுமதியை உணர்த்துகிறது.. மேலும், *நாளை மறுமையில் முதலில் விசாரிக்கப்படுவது இரத்தம் பற்றியதாகும்.* இதனையே ஸஹீஹ் புகாரி, ஸஹீஹ் முஸ்லிம் உள்ளடங்களாக பல

[22] al-Qur᾽ān, al-Baqarah 2: 30.

[23] al-Qur᾽ān, al-Aḥzāb 33: 72.

[24] al-Qur᾽ān, al-Zalzalah 99: 7 & 8.

[25] al-Qur᾽ān, al-Mā᾽idah 5: 32.

[26] al-Qur᾽ān, al-Isrā᾽ 17: 31.

[27] al-Qur᾽ān, al-Nisā᾽ 4: 93.

ஹதீஸ் கிரந்தங்கள் விளக்குகின்றன.[28] மனிதர் அல்லாத உயிரினங்களையும் காரணமில்லாமல் கொலை செய்ய இஸ்லாத்தில் அனுமதி கிடையாது. மேலும், இஸ்லாம் அனைத்து மனிதர்களுக்கும் பொதுவான ஒழுக்கவியலாக இதனைக் குறிப்பிடுகின்றது. இது இஸ்லாம் மனிதர்களுக்கு வழங்கியுள்ள மிகப்பெரிய உரிமையும் வழிகாட்டலுமாகும்.

### 2.2.2 விலங்குகள்

ஆரம்பகாலம் உட்பட இன்றைய 21ஆம் நூற்றாண்டு வரை இஸ்லாம் விலங்குகளை துன்புறுத்துகிறது என்ற தவறான கருத்து நிலவுகின்றது. இஸ்லாத்தின் கண்ணோட்டத்தில் மிருகங்கள் என்பதனை ஆராய்வதற்கு முன்பாக, இஸ்லாத்தின் தோற்றத்திற்கு முன்பு அரபு நாட்டில் வாழ்ந்த மக்கள் உயிர்ப் பிராணிகளிடத்தில் நடந்து கொண்ட முறை பற்றி அறிவது அவசியமாகும். மிருகங்களை கொலை செய்வதையும், அவற்றை சித்திரவதை செய்வதையும், அவர்கள் தமது பொழுது போக்காகக் கொண்டிருந்ததோடு, அநியாயமான முறையில் மிருகங்களைக் கொலை செய்து உண்ணுமாறு பொதுமக்களை கேட்டுக் கொள்வர். போட்டி போட்டு ஒட்டகங்களை அறுத்துக் கொல்லும் வழக்கமும் அவர்களிடம் காணப்பட்டது. ஒருவர் இறந்து விட்டால் அவரின் ஒட்டகத்தை அவரின் புதைகுழிக்கு மேலாக நீரோ, உணவோ கொடுக்காது கட்டி வைப்பர். இதனால் அவ் ஒட்டகம் அப்படியே இறந்து விடும் நிலை காணப்பட்டது.[29]

மேலும் அன்றையகால மக்கள் உயிர்ப்பிராணிகளை கட்டிவைத்துக் குறிபார்த்து அம்பெறிந்து கொன்றுவிடும் பழக்கத்தைக் கொண்டிருந்தனர். இச்செயலை நபி (ஸல்) அவர்கள் தடுத்ததுடன் இவ்வாறு செய்பவர்களை சபிக்கவும் செய்தார்கள்.[30]

> "ஒரு முறை ஒரு இளைஞன் கோழி ஒன்றை கட்டி வைத்து அதனை கொன்று விட முயற்சிப்பதைக் கண்ட அப்துல்லாஹ் இப்னு உமர் (ரழி) அவர்கள் அவனை அழைத்துச் சென்று, அவனின் கூட்டத்தாரிடம் ஒப்படைத்து இதன் பின்னர் இவ்வாறு செய்ய அனுமதிக்காதீர்கள் என்று கூறினார்கள். உயிரினங்களோடு அன்பாக நடந்து கொள்ளுமாறும்; இல்லையேல் அவற்றுக்காக இறைவன் தண்டிப்பான் என்று கூறியதோடு, இவ்வாறு செய்வதனை நபி (ஸல்) அவர்கள் தடைசெய்துள்ளார்கள் என்றும் கூறினார்".[31]

---

[28] Muḥammad ibn Ismāʿīl Abū ʿAbd Allah al-Bukhārī, *al-Jāmiʿ al-Musnad al-Ṣaḥīḥ al-Mukhtaṣar Min Umūr Rasul Allah Wa Sunanihi Wa Ayyāmihi*, ed. Muhammad Zuhair al-Nasir (Beirut: Dār Ṭawq al-Najāh, 2001), ḥadīth no. 6533; Ibn al-Ḥajjāj al-Naysābūrī Muslim, *al-Musnad al-Ṣaḥīḥ al-Mukhtaṣar Min al-Sunan Bi Naql al-ʿadl ʿan al-ʿAdl Ilā Rasul Allah*, ed. Naẓar Muḥammad al-Fāriyābī (Riyadh: Dār Ṭaybah, 2006), ḥadīth no. 3178; al-Tirmidhī, *al-Jāmiʿ al-Kabīr*, ḥadīth no. 1316; Aḥmad ibn Shuʿayb Abū ʿAbd al-Raḥmān al-Nasāʾī, *al-Mujtabā Min al-Sunan*, ed. ʿAbd al-Fattāḥ Abū Ghuddah (Aleppo: Maktab al-Maṭbūʿāt al-Islāmiyyah, 1986), ḥadīth no. 3926.

[29] M. Akram, *Nadaimuraik Ketra Islam – Chapter 1* (Pasiyala: Musalman Publication, 2006), 266.

[30] al-Bukhārī, *al-Jāmiʿ al-Ṣaḥīḥ*, ḥadīth no. 5515.

[31] Aḥmad ibn Muḥammad Abū Abd Allāh Ibn Ḥanbal, *al-Musnad*, ed. Shuʿayb al-Arnāʾūṭ (Beirut: Muʾassasah al-Risālah, 2001), ḥadīth no. 5682.

இவ்வாறே, அன்றைய அரேபியர் விருந்தாளிகள் வந்தால் முழு ஒட்டகத்தையும் அறுக்க முடியாது, குறைந்த மாமிசம் வாங்கவும் முடியாது என்ற நிலையில் உயிருடன் உள்ள ஒட்டகத்தின் ஒரு துண்டை வெட்டியெடுத்துச் சமைப்பர். நபி (ஸல்) அவர்கள் இதை வன்மையாகக் கண்டித்து இவ்வகையில் பெறப்பட்ட மாமிசத்தை புசிப்பது ஹராம் என்றார்கள்.[32]

இவ்வாறு அன்றைய அரேபியர்களிடம் காணப்பட்ட ஜீவகாரூண்யத்திற்கு எதிரான அனைத்துச் செயல்களையும் நபி (ஸல்) அவர்கள் தடுத்தார்கள். மனிதர்களிடத்தில் போலவே மிருகங்களிடத்திலும் அன்பாக நடந்து கொள்வதும், அவற்றிற்கு உதவி புரிவதும், அவற்றை வேதனை செய்யாமல் இருப்பதும் சிறந்த செயல் என இஸ்லாம் வலியுறுத்துகிறது. 'ஒரு மனிதன் மிகவும் தாகித்த நிலையில் பாலைவனப் பகுதியில் நடந்து சென்று கொண்டிருந்த போது நீர் பெறக் கூடிய ஒரு கிணற்றைக் கண்டான். அதனுள் அவன் இறங்கி தனது தாகத்தை தீர்த்துக் கொண்டு கரையேரிய போது தன்னைப் போலவே, தாகித்த நிலையிலிருந்த ஒரு நாயைக் கண்டான். அதன் வேதனையை உணர்ந்த அவன் மீண்டும் கிணற்றினுள் இறங்கி தண்ணீர் எடுத்து அந்நாயின் தாகம் தீர வழி செய்தான். இச் செயலினால் அவனது பாவங்கள் மன்னிக்கப்பட்டதாக, புகாரி ஹதீஸ் [33] கிரந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. இதற்கு மாற்றமாக நடந்த பெண் நரகம் நுழைவாள்" என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்.[34]

மேலும், நபி (ஸல்) அவர்கள் "(விலங்குகளின்) முகத்தில் அடிப்பதையும் முகத்தில் சுட்டு அடையாளமிடுவதையும் தடுத்தார்கள்" [35] இதற்கு மாற்றமாக உயிர்களிடத்தில் அன்பு காட்டுபவன் மீது அல்லாஹ்வும் இரக்கம் கொள்கிறான் என்பதே உண்மையாகும். ஒரு முறை ஒரு ஸஹாபி நபி (ஸல்) அவர்களிடம் தான் ஒரு ஆட்டை பலியிடச் செல்லும் போது தனக்கு அதன் மேல் இரக்கம் ஏற்படுவதாகக் கூறினார்கள். அப்போது நபி (ஸல்) அவர்கள் "நீர் ஆட்டின் மீது இரக்கம் காட்டினால் அல்லாஹ் உன் மீது இரக்கம் காட்டுவான்" என்று கூறினார்கள்.

இஸ்லாம், உணவுக்கான விலங்குகள் விடயத்தை சற்று விரிந்த கண்ணோட்டத்தில் நோக்குகின்றது. இஸ்லாத்தில் அசைவ உணவு சாப்பிட வேண்டும் என்று நிர்ப்பந்தம் கிடையாது. எனினும், அல்லாஹ் அதனை அனுமதித்திருக்க அதனை உண்ணுவது குற்றமில்லை. **"கால் நடைகளையும் அவனே படைத்தான்: அவற்றில் உங்களுக்கு கதகதப்புள்ள ஆடையணிகலன்களும் இன்னும் பல பலன்களும்**

[32] Sulaymān ibn al-Ashʿath al-Azdī al-Sajistānī Abū Dāwūd, *al-Sunan*, ed. Muḥammad ʿAwwāmah, 1st ed. (Beirut: Muʾassasah al-Rayyān, 1998), ḥadīth no. 2858; al-Tirmidhī, *al-Jāmiʿ al-Kabīr*, ḥadīth no. 1480.

[33] al-Bukhārī, *al-Jāmiʿ al-Ṣaḥīḥ*, ḥadīth no. 6009.

[34] al-Bukhārī, ḥadīth no. 2365.

[35] Ibn al-Ḥajjāj al-Naysābūrī Muslim, *al-Musnad al-Ṣaḥīḥ al-Mukhtaṣar Min al-Sunan Bi Naql al-ʿAdl ʿan al-ʿAdl Ilā Rasul Allah* (Cairo: Dār al-Taʾṣīl, 2014), ḥadīth no. 5672.

**இருக்கின்றன. அவற்றிலிருந்து நீங்கள் புசிக்கவும் செய்கிறீர்கள்"** [36] இவற்றிலும், எவ்வகையான மாமிச உணவுகளை உண்ணமுடியும் என்பது பற்றியும் தெளிவாக அல்குர்ஆன் குறிப்பிடுகிறது. **"தாமாகச் செத்தது, ஓட்டப்பட்ட இரத்தமாக அல்லது அசுத்தமாகிய பன்றியின் மாமிசமாக உள்ளதைத் தவிர, (வேறதனையும்) உண்பவருக்கு அது உண்ண தடுக்கப்பட்டதாக எனக்கு (வஹீ மூலம்) அறிவிக்கப்பட்டதில் நான் காணவில்லை."** [37] மேலும், அல் மாயிதாவில் அவ்வாறே தெளிவுபடுத்துகிறான். **நபியே! அவர்கள் (உண்பதற்குத்) தங்களுக்கு ஹலாலான (அனுமதிக்கப்பட்ட)வை எவை என்று உம்மிடம் கேட்கிறார்கள். நீர் கூறும்: உங்களுக்கு ஹலாலானவை, சுத்தமான நல்ல பொருள்களும், அல்லாஹ் உங்களுக்குக் கற்பித்திருக்கிறபடி வேட்டையாடும் பிராணி, பறவைகளுக்கு நீங்கள் பயிற்சியளித்து அவை வேட்டையாடி நீங்கள் பெற்றவையையும் புசியுங்கள்; எனினும் நீங்கள் (வேட்டைக்கு விடும்போது) அதன்மீது அல்லாஹ்வின் பெயரைக் கூறி விடுங்கள்; அல்லாஹ்வுக்கு அஞ்சுங்கள்; நிச்சயமாக அல்லாஹ் கணக்கெடுப்பதில் மிகவும் விரைவானவன்.**[38]

அனுமதிக்கப்பட்ட விலங்குகளை உணவிற்காக அறுப்பதற்கு இஸ்லாம் அனுமதி அளித்திருந்தாலும் அவற்றை வீணாகவோ அனாவசியமாகவோ அறுப்பதற்கு அனுமதியளிக்கவில்லை. மனித வாழ்க்கைக்குத் தேவையான அளவுக்கு மாத்திரமே அவற்றை அனுபவிக்க முடியும். விலங்குகளை உண்ண அனுமதித்திருந்த போதிலும், மனித உடலுக்கு தீங்காக அமையக் கூடிய உணவுகள் பற்றி குறிப்பிட்டு தடைவிதித்து எச்சரித்துள்ளது. என்றாலும், இஸ்லாம் நிர்ப்பந்த சூழ்நிலை ஏற்பட்டால் தடைசெய்யப்பட்ட உணவுகளை உண்ணுவதற்கு அங்கீகரித்துள்ளது. [39] மேலும் பிரிதொரு ஆயத்தில் இதேபோன்று தடைசெய்யப்பட்ட உணவுகள் தொடர்பாக குறிப்பிடுகிறது.[40]

இஸ்லாம் வரையறுத்துள்ள மாமிச உணவுகளில் வேட்டைப் பற்கள் கொண்ட பிராணிகள், கீறிக்கிழிக்கும் நகங்கள் கொண்ட பிராணிகள், நாய், பன்றி போன்றவறவை உண்ணத் தடுக்கப்பட்டவையாகும். இந்த வகையில் இந்த வரையறைக்குள் வருகின்ற மிருகங்களும் பறவைகளும் உணவுக்காக அறுக்கப்படாமல் பாதுகாக்கப்படுகின்றன. அவற்றுள் பாம்பு, தேள் போன்ற மனிதனுக்குக் தீங்கு விளைவிக்கும் விலங்குகள் கொல்லப்படுவதை இஸ்லாம் அனுமதிக்கின்றது. மிக முக்கியமாக இஸ்லாம், தேவைக்கே அன்றி; யுத்தகளத்தில் கூட விலங்குகள் கொல்லப்படுவதை தடை செய்கிறது, "நபிமார்களில் ஒரு நபியை எறும்பொன்று கடித்துவிட்டது. அந்த எறும்புப் புற்றை தீயிட்டுக் கொழுத்தும்படி உத்தரவிட்டார்கள். அதன்படி கொழுத்தப்பட்டது. அப்போது அந்த நபிக்கு ஓர் எறும்பு கடித்ததினால் அல்லாஹ்வை தஸ்பீஹ் செய்யும் ஒரு கூட்டத்தை

[36] al-Qur'ān, al-Naḥl 16: 5.
[37] al-Qur'ān, al-An'ām 6: 145.
[38] al-Qur'ān, al-Mā'idah 5: 4.
[39] al-Qur'ān, al-Baqarah 2: 173.
[40] al-Qur'ān, al-Naḥl 16: 115.

அழித்து விட்டீர்கள் என வஹியின் மூலம் கூறினான்".[41] இது இஸ்லாம் விலங்கு வழங்கும் உரிமைகள் பற்றி தெளிவுபடுத்துகிறது.

### 2.2.3 தாவரங்கள்

உயிரினங்கள் என்ற கண்ணோட்டத்திலே தாவரங்களும் உள்ளடங்குகின்றது. நவீன விஞ்ஞானமும் இதற்கு ஆதாரமாக உள்ளது. அல்லாஹ்வின் அனைத்துப் படைப்புகளைப் போலவே மிகவும் அற்புதமானவை தாவரங்களாகும். அல்குர்ஆன் தாவரங்களின் பெறுமதியை நீரின் மூலம் உணர்த்துகிறான்.[42] மேலும், பிரிதொரு அத்தியாயத்தில்: **"அவனே வானிலிருந்து நீரைப் பொழிந்து அதைக் கொண்டு ஒவ்வொரு பொருளின் தாவரங்களையும் வெளியாக்கினான்"**[43] இதனூடாக மக்களுக்கு தாவரங்களில் நன்மை உண்டுஎனக் கூறுகின்றான். இது தாவரங்கள் அல்லாஹ்வின் அருள் என்பதனையே தெளிவுபடுத்துகின்றன.

நன்மைகளை அள்ளித்தரும் பெறுமதிமிக்க செயல்கள் என்ற அடிப்படையில் தாவரங்களையோ, பயினங்களையோ, அநியாயமான முறையில் அழிக்க வேண்டாமென்றும் மாறாக, பூமியில் அவற்றை நட்டுவதன் மூலம் நல்ல காரியங்களைப் புரியலாம் எனவும் இஸ்லாம் மனிதனைப் பணிக்கிறது.

தாவரங்கள் வளர்க்கப்பட வேண்டும் என்றும் அவை வீணாக அழிக்கப்படக் கூடாது எனக் கூறுகின்ற இஸ்லாம் மனிதனுக்குத் தீங்கு விளைவிக்கின்ற கஞ்சா போன்ற தாவரங்களை வளர்ப்பதையும் தூண்டவில்லை. அத்தோடு, தாவர உற்பத்திகள் மனித நலனைப் பாதிக்கின்ற வகையிலும் உபயோகப்படுத்தப்படல் ஆகாது எனவும் இஸ்லாம் கூறுகின்றது. ஈச்சை, தென்னை, பனை, பழங்கள், பூக்கள் என்பவற்றின் உற்பத்திகள் மதுசாரத் தயாரிப்புக்கும் போதைப்பொருள் உருவாக்கத்துக்கும் துணையாக அமைவதை இஸ்லாம் வன்மையாகக் கண்டிக்கின்றது. இது தொடர்பாக புகாரி; பாகம் நான்கு, பாடம் 5இல் **"மது ஐந்து வகைப் பொருட்களால் தயாரிக்கப்பட்டுவந்த நிலையில் மதுவிலக்கு வந்தது. திராட்சை, பேரீச்சம்பழம், கோதுமை, தொலி நீக்கப்படாத கோதுமை, தேன் ஆகியவை அந்தப் பொருட்களாகும். மது என்பது அறிவுக்குத் திரையிடக்கூடியது.** என இப்னு உமர் (ரலி) அவர்கள் கூறியுள்ளார்கள்.[44]

## 3. கலந்துரையாடல்

### 3.1 வேற்றுமைகள்

பொதுவாக பௌத்தமும் இஸ்லாமும் - முரண்படும் இடங்கள் பல உள்ளன. அவை:

[41] al-Bukhārī, *al-Jāmiʿ al-Ṣaḥīḥ*, ḥadīth no. 3019.
[42] al-Qurʾān, al-Wāqiʿah 56: 68 & 69.
[43] al-Qurʾān, al-Anʿām 6: 99.
[44] al-Bukhārī, *al-Jāmiʿ al-Ṣaḥīḥ*, ḥadīth no. 5588: மேலம், ḥadīth no. 5579 & 5580: இலும் பார்வையிட முடியும்.

பௌத்தம் காரண-காரிய விதியை அடிப்படையாகக் கொண்டுள்ளதோடு, இஸ்லாம் அவ்விதிகளுடன் சேர்த்து இறைப் போதனைகள் தொடர்பான விடயங்களில் கவனம் செலுத்துகிறது.

இஸ்லாம் இறைவன் ஒருவன் எனப்படுகின்ற ஓறிரைக் கொள்கையில் நம்பிக்கை கொண்டுள்ளதோடு, பௌத்தமானது, இறைக் கோட்பாடுகளில் அமைதியான போக்கினைக் கடைப்பிடித்துள்ளதோடு, ஓறிரைக் கொள்கை பற்றியும் பேசவில்லை.

பௌத்தம் மறுபிறப்பில் நம்பிக்கை கொண்டு கர்மாவின் அடிப்படையில் மனிதனது வாழ்வு அமையும் எனும் நம்பிக்கையைக் கொண்டுள்ளது. எனினும், இஸ்லாம் தான் செய்யக்கூடிய செயல்களுக்குரிய கூலி இவ்வுலகில் அல்லது மரணத்திற்குப் பின்னுள்ள மறுமை வாழ்வில் கிடைக்கும் என்ற இறை நம்பிக்கையைக் கொண்டுள்ளது

### 3.1.1 பௌத்த கண்ணோட்டத்தில் வாழும் உரிமை 'பானாதிபாதா'

பௌத்தம் கொல்லாமை என்பதனை 'பானாதிபாதா' என பாளி மொழியினூடாக குறிப்பிடுகின்றது. அதேசமயம், கொல்லாமை எனும் கட்டளையை பஞ்ச சீலத்தின் பிரதானமான கட்டளையாகவும் வலியுறுத்துகின்றது. பௌத்தனாக பிறந்த ஒருவனும் கொலை எனும் பாவச் செயலில் ஈடுபடக் கூடாது. அவ்வாறு ஈடுபடுவானாயின் அவன் செய்த பாவத்தினுடைய கர்மா அவனைப் பின் தொடர்ந்து வருவதோடு மாத்திரமன்றி அவனால் இப்பிறவியில் பரிநிர்வாணத்தினையும் அடைய முடியாது.

மேலும், பௌத்த கொல்லாமையின் அடிப்படையில் ஒவ்வொரு உயிரிற்கான கொலைக்கும் பாகுபாட்டினை காணக்கூடியதாக உள்ளது. விலங்குகளின் விடயத்தில் சில பல்லினச் சூழலில் பல்வேறு எதிர்ப்புகள் காணப்பட்டாலும், அது புத்தர் குறிப்பிட்ட வழி இல்லை என சோமானந்த தேதர் குறிப்பிடுகிறார்.

### 3.1.2 இஸ்லாமிய கண்ணோட்டத்தில் வாழும் உரிமை 'கத்ல்'

இஸ்லாம் கத்ல் எனும் கொலை செய்தலை மிகப் பயங்கரமான பாவமாக் குறிப்பிட்டுள்ளது. சிறிய, பெரிய எவ்வுயிரினமாக இருந்தாலும் அதனை அநியாயமான முறையில் கொலை செய்வதற்கு எவருக்கும் உரிமை இல்லை என்பது இஸ்லாத்தினுடைய போதனை. அவ்வாறு ஒரு உயிரை அநியாயமான முறையில் அழிப்பவனுக்கு தண்டனை தன் இறைவனிடத்தில் காத்துக் கொண்டிருக்கிறது.

அதேபோன்று, இஸ்லாம், விலங்குகள் மற்றும் தாவரங்களை மனித தேவைக்காக பயன்படுத்த முடியும் என்று கட்டளையிட்டிருந்தாலும், அவற்றை அநியாயமான முறையிலும், மனிதத் தேவையை விட அதிகமாகவும் பயன்படுத்த கூடாது என ஈன்று குறிப்பிடுகிறது.

அதே போன்று பௌத்தம் இறைவன் தொடர்பான கருத்துக்களில் தனது போதனைகளை குறிப்பிடுவதில் பாரிய இடைவெளியைக் கொண்டுள்ளதோடு பௌத்தததில் ஓறிரைக் கொள்கைக்கும் இடமில்லை என்பது தெளிவாகும். மாறாக அது காரணகாரிய விதியை அடிப்படையாகக் கொண்டதும், பிறப்பிலிருந்து விடுதலை

பெறுவதினூடாக பரிநிர்வானத்தை அடைவது எவ்வாறு என்பதனையும் விளக்கும் கோட்பாடுகளைக் கொண்டுள்ளது.

இஸ்லாம் ஒறிரைக் கொள்கையில் நம்பிக்கை கொண்டுள்ளதோடு அனைத்து செயல்களுக்கும் கூலி பாகுபாடு இன்றி கிடைக்கும் என அசையாது நம்பிக்கை கொண்டுள்ளது. இதனால் கொலைக்கு தண்டனையானது, ஒருவர் கொலையாளி என நிரூபணமான பின்னரே வழுங்கப்படும். அது இவ்வுலகில் அல்லது மறுமையில் இறைவனால் வழுங்கப்படும் என்பது முஸ்லிம்களுடைய நம்பிக்கை. எனினும், பௌத்தம் தண்டனை தொடர்பாக இஸ்லாம் குறிப்பிடுவது போன்று பேசவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. இவ்வாய்வின் அலகு 2.2.1, குறிப்பிட்டவாறு இது முக்கியமாக நோக்கப்படவேண்டிய ஒரு விடயமாகும்.

### 3.2 ஒற்றுமை

பௌத்த மற்றும் இஸ்லாத்திற்கு இடையில் பாரிய வேற்றுமைகள் காணப்பட்ட போதிலும், வாழும் உரிமை என்ற விடயத்தில் இரண்டிற்குமிடையே ஒற்றுமை உள்ளதனை அவதானிக்க முடியும். பௌத்தம் மற்றும் இஸ்லாம்; வாழும் உரிமையை ஊக்குவிப்பதோடு, அவ்வுரிமை பறிக்கப்படுவதனையும் வன்மையாகப் பேசுகிறது. பௌத்த பானாதிபாதா மற்றும் இஸ்லாமிய கத்ல் அடிப்படையில் வேறுபாடுகள் காணப்பட்ட போதிலும் இரண்டும் அநியாயமான முறையில் கொலை செய்யக்கூடாது என்பதில் ஒருமித்த கருத்தினையே கொண்டுள்ளது.

### முடிவுரை

மேற்படி பௌத்த மற்றும் இஸ்லாம் மார்க்கமானது மனித வாழ்வின் உயர்வினை மதித்து கொல்லாமையை ஏற்றுக் கொள்கிறது. மனிதன், விலங்குகள், தாவரம் என அனைத்து உயிரினங்களையும் வேண்டுமென்றே கொலை செய்வதனை தடை செய்கிறது. இஸ்லாம் மற்றும் பௌத்தம் குறிப்பிடும் கொல்லாமை தொடர்பான கட்டளை பெரும்பாலான இரு மதங்களை பின்பற்றுபவர்களும் அறியாதவர்களாகவே இருக்கின்றனர். பெரும்பாலான சந்தர்ப்பங்களில் ஆய்வில் ஈடுபடாமல் மூன்றாம் நபரின் வாய்வார்தைகளையே நம்புகின்றனர். இந்நிலையில் இருந்து சற்று விலகி இவ்வாய்வு ஆழமான நோக்கில் இரு மதங்களின் போதனைகளுக்கும் மதிப்பளித்து விளக்கப்பட்டுள்ளதனை அவதானிக்க முடியும்.

இதனோடு இஸ்லாம் மார்க்கமானது உயிர் வாழும் உரிமையை அனைத்து உயிரினங்களுக்கும் வழங்கியிருப்பதோடு மனிதனும் ஓர் இயற்கை விலங்கு எனும் கூற்றின் அடிப்படையிலும், மனிதனின் இயற்கை உடலியல் உளவியல் தேவைகளை கருத்திற் கொண்டும் மனிதனுக்கு தீங்கு விளைவிக்காத விலங்குகள் மற்றும் தாவரங்களை அநியாயமான முறையின்றி, தனது வாழ்வியல் தேவைக்கேற்ற அளவில் பயன்படுத்துவதற்கு அனுமதியளித்துள்ளது. பௌத்தமும் விலங்குணவினை

அனுமதியளித்துள்ள போதிலும் அவற்றுக்கான நடைமுறைத் தன்மை முரணாக உள்ளதனை அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

## References


Aadhi. 'Boomith Thaaikkum Urimai Undu'. Hindu Tamil, 2015.

Abū Dāwūd, Sulaymān ibn al-Ashʿath al-Azdī al-Sajistānī. *al-Sunan*. Edited by Muḥammad ʿAwwāmah. 1st ed. Beirut: Muʾassasah al-Rayyān, 1998.

Akram, M. *Nadaimuraik Ketra Islam – Chapter 1*. Pasiyala: Musalman Publication, 2006.

al-Bukhārī, Muḥammad ibn Ismāʿīl Abū ʿAbd Allah. *al-Jāmiʿ al-Musnad al-Ṣaḥīḥ al-Mukhtaṣar Min Umūr Rasul Allah Wa Sunanihi Wa Ayyāmihi*. Edited by Muhammad Zuhair al-Nasir. Beirut: Dār Ṭawq al-Najāh, 2001.

al-Nasāʾī, Aḥmad ibn Shuʿayb Abū ʿAbd al-Raḥmān. *al-Mujtabā Min al-Sunan*. Edited by ʿAbd al-Fattāḥ Abū Ghuddah. Aleppo: Maktab al-Maṭbūʿāt al-Islāmiyyah, 1986.

al-Tirmidhī, Muḥammad ibn ʿĪsā Abū ʿĪsā. *al-Jāmiʿ al-Kabīr*. Edited by Bashar Awwad Maʿruf. Beirut: Dar al-Gharb al-Islami, 1998.

*Dhammapada*. Taipei: The Corporate Body of the Buddha Educational Foundation, 2013.

Harvey, Peter. *An Introduction to Buddhism*. Cambridge: Cambridge University Press, 2013.

———. *An Introduction to Buddhist Ethics*. Cambridge: Cambridge University Press, 2000.

Ibn Ḥanbal, Aḥmad ibn Muḥammad Abū Abd Allāh. *al-Musnad*. Edited by Shuʿayb al-Arnāʾūṭ. Beirut: Muʾassasah al-Risālah, 2001.

Mahatthanadull, Sanu, and Mahatthanadull. Sarita. 'The Five Precepts: Criteria and the Promotion of Individual and Social Peace'. *The Journal of the International Association of Buddhist Universities (JIABU)* 11, no. 3 (Special Edition on Vesak Celebrations Conference 2) (2018): 180–193.

Muslim, Ibn al-Ḥajjāj al-Naysābūrī. *al-Musnad al-Ṣaḥīḥ al-Mukhtaṣar Min al-Sunan Bi Naql al-ʿadl ʿan al-ʿAdl Ilā Rasul Allah*. Edited by Naẓar Muḥammad al-Fāriyābī. Riyadh: Dār Ṭaybah, 2006.

———. *al-Musnad al-Ṣaḥīḥ al-Mukhtaṣar Min al-Sunan Bi Naql al-ʿAdl ʿan al-ʿAdl Ilā Rasul Allah*. Cairo: Dār al-Taʾṣīl, 2014.

Saddhatissa, Hammalawa. *Buddhist Ethics*. London: Wisdom Publication, 1987.

Therar, Kiribathkoda Yananandha. *Edo Neegl Thedum Dheva Thoothan*. Polgahavela: Mahamega Veliyeettalarhal, 2017.

Thero, Thiyagaduva Somananda. 'Sri Lanka Muslims'. Facebook, 2019.

United Nations Department of Public Information, NY. 'Universal Declaration of Human Rights - English'. United Nations. Accessed 30 June 2022. https://www.ohchr.org/en/human-rights/universal-declaration/translations/english.

Viswanathan, V.N. *Manitha Urimaigal*. Sri Lanka: Eastern University, 2006.